உ
சிவமயம்

# இந்துசாதனம்

சைவ பரிபாலன சபை வெளியீடு. பிரதி விலை: சதம் 20

ஆரம்பம்: விரோதி ஞு (1889) ஆவணிமீ 28-ம் வ அச்சகம்: சைவப்பிரகாச அச்சியந்திரசாலை, 450. காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 356

புத்-அஎ] யாழ்ப்பாணம்:- இராக்ஷத ஞு புரட்டாதி மீ உச-உ வெள்ளிக்கிழமை (10-10-1975) [இல: உஎ

## தாயும் தாயகமும் தலைமையில் மிக்கது.

### பரிசுப் பேருரையில் மாணுக்கர்களுக்கு மதியுரை

"பெற்ற தாயும் பிறந்த பொன்னுடும் எல்லாவற்றிலும் மேலானது. தொழில் தேடி வெளிநாடு செல்லும் எமது தமிழ் இளைஞர்கள் இதனை உணர்ந்து கொள்ள வேண்டும்" என்று சட்டமா அதிபதி திரு. சிவா. பசுபதி அவர்கள் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிப் பரிசுத் தின விழாவில் சிறப்புரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டார்கள்.

கல்லூரியின் கடந்தகால சேவைகளை அதிபர் திரு பி. எஸ் குமாரசாமி அவர்கள் தனது அறிக்கையில் தெளிவுபடுத்தினுர்கள்

திருமதி சிவா. பசுபதி அவர்கள் பரிசில்களை வழங்கினுர்கள்,

பழைய மாணவர் சங்கச் செயலாளர் திரு. இ. மகேந்திரன் நன்றியுரை நவின்ருர்.



சொல்விற் பனமு மவதானமுங்
கல்வி சொல்லவல்ல
நஜ்வித்தையுந் தந்தடிமை
கொள்வாய் நளினுசனஞ்சேர்
செல்விக் கரிதென் ஞெருகாலமுஞ்
சிதையாமை நல்கும்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே
சகல கலாவல்லியே.

## நாவலர் தொடர்ந்த வழக்கு விளக்கம்

[ பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் ]

எதிரிகள் இருவர்:

ஒருவர்: தில்லைத் தலைமைத் தீக்ஷிதர் சபாநடேசர்
மற்றையவர்: இராமலிங்கர்.

குற்றம் இரண்டு:

ஒன்று: அச்சுறுத்தியமை.
மற்றது: நிந்தித்தமை.

i தீக்ஷிதர் நாவலரை அடித்து முரித்து முத்தி கொடுக்க எத்தனித்தவர்.

ii இராமலிங்கர் நாவலர் என்ற சொல்லுக்குப் பல வேறு பொருள் கூறி நிந்தித்தவர்.

குரோத காரணம்:

i. தீக்ஷிதர்கள் சிவதீக்ஷையின்றிப் பழைய நிலையிலிருந்து தவறிவிட்டார்கள். சிதம்பராலய பூசைக் கிரமம்பற்றிப் பதஞ்சலி முனிவர் செய்த பத்ததி ஒன்றுண்டு. அதையும் புறக் கணித்துவிட்டார்கள். இக் குறைகளை எடுத்துக் காட்டிச் சீர் திருத்தப் புகுந்தார் நாவலர். இச் செயல ஆத்திரத்தைப் பெருக்கி விட்டது.

ii. இராமலிங்கர் பாடல்களைத் தேவார திருவாசக வரிசையில் வைத்து மதிக்க நாவலர் உடன்பட வில்லை, இது இராமலிங்கர் வர்க்கினர்பால் கோதிப்பை உண்டாக்கிவிட்டது.

ஒருமைப்பாடு: i. தீக்ஷிதரும் இராமலிங்கரும் கொள்கையில் பெரிதும் வேறுபாடுடையர்; அப்படியிருந்தும் நாவலரை எதிர்ப்பதன்பொருட்டு ஒன்றுகூட வேண்டியவர் ஆயினர்.

இராமலிங்கர், சீட வர்க்கத்தினர் வழி நின்று, தீக்ஷிதரைத் திருப்தி செய்ய, நாவலரை நிந்திக்க வேண்டியவராயினர். பாவம்!

ii, இராமலிங்கர் பேச்சுப் பேரம்பலப் பிரசங்கம் என்று பெயரிட்டுப் பிரசுரஞ் செய்யப்பட்டது.

( வளர்ச்சி 2ம் பக்கம் )

உயிர்ப் பலி நிறுத்தம் — சைவ மக்களின்

## தலையாய கடமை இது



நல்லை. ஆதீனம் ஸ்ரீ-ல-ஸ்ரீ பரமாசாரிய சுவாமிகள் செய்தி

அராலி - கிழக்கு வாலை அம்பாள் கோயிலில் உயிர்ப் பலி நடைபெற்றுவருவது மிகவும் வருந்தத் தக்கது.

"அன்னையினும் தயவுடையாய்"

என்று வணங்கினர் ஆன்றோர். ஆகவே அன்னையின் பேரால் உள்ள ஆலயத்தில் உயிர்ப் பலி நடைபெறுவது எந்தச் சைவமகனும் ஏற்கக்கூடிய செயலன்று. புலாலுணும், வேட்டுவ சாதியிற் பிறந்த வேடனுகிய நாகனும் புத்திரப் பேறு கருதி,

"வாரணச் சேவலோடு
வரிமயிற் குலங்கள் விட்டு"

என்கின்றார் சேக்கிழார்,

"வீணே பலி கவர்
தெய்வங்கள்பால் சென்று
மிக்க அன்பு
பூணேன்"

என்கின்றார் அபிராமிப்பட்டர், ஜீவ காருண்ய சிந்தையுடைய நம் மக்கள் இப்பழிச்செயலை அறவே நீக்க முன் வரவேண்டும்.

அராலி — வட்டுக்கோட்டையில் மட்டுமல்ல எந்த இடத்திலும் உயிர்ப் பலியைத் தடுக்க வேண்டியது சைவ மக்களது தலையாய கடனுகும். ——

## சிந்தைதெளிந்தது

——0——

### பழைய முறையில் சமய விடுமுறை அமையும்

——

சமய சபைகளும் பத்திரிகைகளும் தொடுத்து எடுத்த முயற்சி பயன் பெற்றிருக்கின்றது.

அமைச்சரவை வைகாசி மாதம் செய்த முடிவைச் செயற்படுத்துவதில்லையென இப்பொழுது மறு முடிவுக்கு வந்திருக்கின்றது

ஆகவே பழைய முறையிலே சிவராத்திரியும் தீபாவளியும் சைவ மக்களுக்கும் பெரியவெள்ளிக்கிழமை கிறீத்தவர்களுக்கும் முசுலீம மக்களுக்கு இறம்லானும் விடுமுறையாகவே தொடர்ந்திருக்கும். ——

## பாராட்டு

சித்தாந்த சரபம் வித்துவான் சைவப் புலவர் க. கணபதிப்பிள்ளை பி, ஏ. அவர்களை வழக்கம்பரை சனசமூக பஜனைச் சபையினர் பாராட்டிக் கௌரவித்துள்ளனர்.

வழக்கம்பரை மகாமாரியம்மன் ஆலயத்தில் சகல கலாவல்லி மாலையை ஆதாரமாக வைதது வித்துவான் அவர்கள் தொடர்ந்து உரை நிகழ்த்தி வந்தார்கள இவரின் சிறப்புரைகளுக்கு இப் பகுதியில் இருந்து பலா திரண்டு வந்திருந்தனர் என்பதும் குறிப்பிடததக்கது, ——

## இராட்சதக்கிணறு

தர்மபுரத்திலுள்ள கஸ்தூரிபாய் இல்லத்து வளவில் பதினெட்டு அடி விட்டமுள்ள நாற்பது அடி ஆழங் கொண்ட இராட்சதக் கிணறுஒன்று தோண்டிக் கட்டப்பட்டுள்ளது, குடிப்பதற்கு ஒரு கிண்ணம தண்ணீர் பெறுவதற்குக் குடியேற்றப்பகுதியில் சில விடங்களில் மக்கள் படும்பாட்டை நேரிற் சென்று அநுபவித்தோரே அறிவர், சென்ற 5-10-75 அன்று பொதுமக்கள உபயோகத்துக்கிது உரியதாயது. பெரும் பகீரதப பிரயத்தனத்துக்கிடையில் உருவான இது ஓர் ஊருணியாக விளங்குமென்று சொல்லவும் வேண்டுமா? இத் தர்மத்தை நினைத்துநிறைவுசெய்த மில்க் வைற் உரிமையாளர் திரு. க, கனகராசா - நாகம்மா தம்பதிகளின் தயாள சிந்தையை எவர்தான் பாராட்ட மாட்டார்கள்?

## ஸ்ரீ குமர குருபர சுவாமிகள் வரலாற்றுச் சுருக்கம்

[ திரு. எஸ். கே, சிவபாலன் ]

ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள் ஸ்ரீ வைகுண்டத்தில் அவதரித்தார். திருச்செந்தூர் முருகப் பெருமான் அருளால் ஐந்தாவது ஆண்டில் ஊமை நீங்கிக் 'கந்தர் கலிவெண்பா'ப் பாடி அருள் பெற்றுர். மதுரை மீனுட்சியம்மை மீது பிள்ளைத் தமிழ பாடி அம்மையால் முத்தாரம் அணியப் பெற்றுர். திருமலை நாயக்க மன்னன் விருப்பத்திற கிணங்க 'நீதி நெறி விளக்கம்' என்னும் நூலை அருளினுர். தருமை ஸ்ரீ மாசிலாமணி தேசிகரை வழிபட்டுப் 'பண்டார மும்மணிக் கோவை பகர்ந்தார், திருவாரூர், புள்ளிருக்கு வேளுர், தில்லை தரிசித்துத் திருவாரூர் நான்மணி மாலை, முத்துக்குமாரசுவாமி பிள்ளைத் தமிழ், சிதம்பர மும்மணிக்கோவை முதலியன பாடினுர். காசி சென்று 'சகல கலாவல்லி மாலை' காசிக் கலம்பகம் முதலியன அருளினுர். சிங்கத்தின் மீதேறிச் சென்று முகலாய மன்னனைக் கண்டு அவன் உதவியாலே கேதார யந்திரம், கேதாரத்துறை அறச்சாலை முதலியன அமைத்தார். வெள்ளியம்பலவாணத் தம்பிரான் முதலியோருக்கு வித்தியாகுருவாகத் திகழ்ந்தார்.

சைவ சமயத்தவர்களின் செய்திப் பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம் வீழ்க தண்புனல்
வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையகமுந் துயர்தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

இராக்ஷத ஹூ புரட்டாதி மீ உசு-உ வெள்ளி

## வழிபட்டு வரங் கேட்போம்!

ஒன்பது இரவும் உள்ளத் தூய்மையுடன் உலக அன்னையை நோக்கி நோன்பிருக்கும் அன்பர்கள் ஈற்றில் வெற்றி பெற்று விடுவதாகவே உணர்ச்சி கொள்வர் அல்லவா?

இது இவ்வாறாகச் சிவபூசைக்குள்ளே கரடி நுழைந்ததுபோல வெற்றி விழா வேளையிலே அராலி அம்பதியில் அந்தகாரம் சூழ்ந்து பகலும் இரவாக அமையக்கூடிய அட்டூழியம் நடைபெற இருக்கின்றது என்று சென்ற இந்துசாதன இதழில் நேயர் ஒருவர் நெஞ்சம் விட்டு நெகிழ்ந்துரைத்திருக்கின்றனர்.

### அந்தோ! என்ன இந்த அசம்பாவிதம்!

இக் காலத்திலா இந்த இழுக்கு என்று நாம் இரங்குவதும் ஒரு விபரீதமே! என்னை!

கொலையும் களவும் மலிந்த காலமாய் விட்டதிக் காலம்; புலையும் புன்மையும் பொலிகின்றதிக்காலம். பொய்யும் புரளியும் பரந்து நிற்பதிக்காலம். நாளுக்கு, இல்லை நாழிகைக்கு எத்தனை பறவைகள் மிருகங்கள் உயிர் நீக்கப்படுகின்றன என்றெல்லாம் நாம் வருந்த வேண்டியிருக்கின்றதெனினும் ஆருயிர்போல நாமெல்லோரும் ஆதரிக்கும் ஆலயங்களில் ஒன்றிலேனும் யாருயிரும் பிரிக்கப்படலாமா? வட்டுக்கோட்டைத் தொகுதியினுள் அமைந்த அராலி ஊருக்கு — ஏன் இந்தத் தொகுதிக்கே இந்த அவப்பெயர் வாராதிருக்க வழி வகுக்க ஆங்கு சைவப் பெரியார்கள் இல்லையா?

மேற்கோள் காட்டி விளங்க வைக்கவேண்டிய காரியம் அல்ல இஃது! முன்னேற்றப் பாதையில் முனைந்து நிற்பவர்கள் முயற்சிக்கவேண்டிய கடமையே பலி நிறுத்தத்தைப் பரிபூரணமாக்குவது என்றுமட்டும் கூறி வெற்றி நாளில் இவ்வியக்கத்துக்குற்றதொரு பெரு வெற்றியைக் கொடுக்க முக்கண்ணியை முப்பொழுதும் வணங்கி வழிபட்டு வரங் கேட்போம்.

## நாவலர் தொடர்ந்த வழக்கு விளக்கம்

(1- ஆம் பக்கத்து வளர்ச்சி)

வழக்கு :

A i. 1869 நவம்பர் 18 - ஆந் தேதி மஞ்சக் குப்பக் கோர்ட்டில் வழக்கு ஆரம்பமாயது. நீதிபதி வெள்ளையர், எதிர்ப் பக்கத்தார் பிரபல வக்கீல்கள் இருவரை ஏற்படுத்தியிருந்தார்கள். ஒருவர் வெள்ளையர்,

ii நாவலர் ஒன்பதின்மர் சாட்சிகளுடன் வந்திருந்தார்; வக்கீல் ஏற்படுத்தவில்லை.

iii தலைமைத் தீக்ஷிதரும் இராமலிங்கரும் குறிப்பிட்ட கூட்டத்திற் பங்கு பற்றவில்லையென்றும், அதே நேரத்தில் வேறு வேறு இடங்களில் வேறு வேறு கருமம் ஆற்றிக் கொண்டிருந்தவர்களென்றும நான்கு தீக்ஷிதர்கள் ஏகமனசாகச் சாட்சியமளித்தார்கள்.

இவ்வளவில் 22 - ஆந் தேதிக்குத் தவணையிடப்பட்டது.

B i நவம்பர் 22 - ஆந் தேதி பிரபல வக்கீல் சௌந்தரநாயகம்பிள்ளை நாவலருக்கு ஏற்பட்டார் இவர் யாழுப்பாணத்தவர்; கத்தோலிக்கர்.

ii 22, 23, 24, 25-ஆந் தேதி ஆகிய நான்கு நாட்களிலும் நால்வர் தீக்ஷிதர்களையும் குறுக்கு விசாரணை செய்தார் சௌந்தரநாயகபிள்ளை.

C அலிபி (Allibi) என்கின்ற தந்திரோபாயம் :

i பிரதான எதிரிகள் குறித்த நேரத்தில் குறித்த இடத்தில் இல்லை என்று சாதிப்பதுவே அலிபி (Allibi) என்கின்ற தோயின் தந்திரம். போக்கை விளக்கஞ்செய்து, அதன் பௌவீனம் பற்றிப் பெத்தாம் நெல்சன் என்கின்ற மேலைத்தேச நியாயவாதிகளின் வாதங்களும் எடுத்துக் காட்டப்பட்டன.

ii நாவலரின் ஒழுக்கம், நீதி, துணிவு ஆகியவற்றைத் திறம்படப் புலப்படுத்துவதாகிய பேர் சிவலின் நற்சான்றிதழும் படித்துக் காட்டப்பட்டது.

இவ்வளவில் 25- ஆம் தேதி தமது வாதத்தைப் பூர்த்தி செய்துகொண்டார் சௌந்தரநாயகம் பிள்ளை.

D i பிள்ளையின் வாதத்தால் 'அலிபி' என்ற உபாய உத்தியில் ஆட்டம் உண்டானது.

ii வழக்கில் அபஜெயம் உண்டாகுமென்ற அச்சத்தால் எதிர்ப் பக்கத்தார் சார்பில் வேறு பல சாட்சிகள் விடுதற்கு உத்தரவு கேட்கப்பட்டது உத்தரவு கேட்டது நவம்பர் 25 - ஆந் தேதி.

iii அன்று தானே சாட்சிகளைக் கொண்டுவரும்படி உத்தரவிட்டார் நீதிபதி.

iv சாட்சிகள் போய்விட்டார்கள் என்றும் அதனால் ஒரு நாள் தவணை தரவேண்டும் என்றும் உத்தரவு கேட்கப்பட்டது

அடுத்த நாள் 26 - ஆந் தேதி சாட்சிகள் வரும் பொருட்டு உத்தரவு கொடுக்கப்பட்டது.

v. 26 – ஆந் தேதி சாட்சிகள் எவரும் வரவில்லை.

எதிர்ப்பக்க வக்கீல் சாட்சிகள் விட விரும்பவில்லை என்று கூறினர்.

vi இந்தப் பிரபல மாருட்டத்தை நீதிபதி குறித்துக் கொண்டார்.

E i அடுத்த மாசம் 20-ஆந் தேதி தீர்ப்புக் கூறுதற்குத் தவணை இடப்பட்டது.

(வளர்ச்சி 3-ஆம் பக்கம்)

## அஜபலிசப்தகம்

[ திரு. மு. கந்தையா, ஏழாலை ]

நாடுமுற்றுஞ் சைவம் நனவுமுற்றுந் தெய்வசிந்தை
வீடுமுற்றும் வெள்ளி சனிவிரதம் — கூடுமோ
ஆடுவெட்டும் பத்தாகள் ஆலயத்தில்! ஆகெடுவாய்
கேடுகெட்ட வையகமே கேள். (1)

அண்டுதோறும் அன்புதரும் ஆலயந்தான் தோன்றியது
பண்டுதொட்டு நம்மிற் படைபடையாய் — மண்டும்
புலைப்பாவம் போக்குதற்கோ புன்மொழிலார் ஆட்டுக்
கொலைப்பாவம் தேக்குவதற் கோ? (2)

தேரிழுத்துப் பத்தர் திரண்டுருண்டு சுற்றிவந்து
நேரெழுந்து நின்றுருகி நேர்த்திசெயும் —
ஓரிடத்தில்
ஆடிழுத்து வெட்டும் அநியாயம் ஐயையோ!
ஏடெழுத்தி லண்டா தினி. (3)

அம்பாளைக் கும்பிடப்போ யாடுவெட்டிக் கூறிட்டு
வெம்பாவஞ் சேர்க்கும் விதியிதுதான் — நம்பாகேள்
கூறுமழுக் கென்று குளிக்கப்போய் மெய்ம்முழுதுஞ்
சேறுமெழுக் கிட்ட செயல், (4)

அன்றுதொடுத் தின்று மழியா தலைப்பதுதான்
கொன்றதனைத் தின்ற கொடும்பாவம் — என்றிருந்தும்
ஆலயத்தே இட்டுச்சென் றூடுபலி யாக்குவதோ
வேலைபத்த வினர் விழல், (5)

ஒருமயிருக் கோர்பிறவி யோயா தெடுத்துவெட்டுண்
டருநரகில் வீழ்ந்திடுவர் ஆடுகொல்வார் — புரியுமிது
கேட்டுணர வாய்த்த செவியுடையாய் கேளப்பா!
ஆட்டினைக்கொல் லாதே அறி. (6)

நாட்டைப் பழிவாங்க நாடாள்வார் குற்றமுண்டு
வீட்டைப் பழிவாங்க வீட்டுறைவார் குற்றமுண்டு
ஆட்டைப் பழிவாங்க ஆங்கதுசெய் குற்றமென்ன?
மோட்டுலகே நீதி மொழி. (7)

[ ஒரு பிறப்பில் ஒருவர் ஒருதடவை ஒரு ஆட்டைக் கொலை செய்தால் அதன் காரணமாக, அந்த ஆட்டில் எத்தனை உரோமமிருந்ததோ அத்தனை தரம் அவர் பிறந்து பிறந்து பிறராற் கொலையுண்டு நரகடைவர் என்பது வேத வாக்கு ]

## நால்வரும் நாவலரும்

3- ஆம் பக்கத்து வளர்ச்சி

தற்காக அர்த்தமொழியாக அல்லாவிடினும் ஆர்வமொழியாக அவரை ஐந்தாங்குரவர் எனப் போற்றுதல் சாலவும் அழகுடைத்தே!

அதுவும் நாவலர் உள்ளத்துக்கு அங்கீகாரமாகாது ஆதலிற் பொருந்தாது எனில், சர்க்கரை உண்ண வேண்டியவன் தன்னை யுண்ணல் சர்க்கரைக்கு விருப்பமோ அன்றோ என உசாவாது அதனை யுண்பது பொருத்தமாதல்போல இதுவும் பொருந்துவதேயாம என்போம. சர்க்கரையை உசாவுவானேன்? அதற்குத் தன் சுவை தெரியாது! நாவலர் திருவுள்ளத்தை இவ் விஷயத்தில் உசாவுவானேன்? அதற்குத் தன் அருமை தெரியாது! சுவையறிந்தவன் சர்க்கரையைத் தாராளமாகச் சுவைக்கலாம்; நாவலர் அருமை யறிந்தவன் அவரை ஐந்தாங்குரவரெனத் தாராளமாகப் பாராட்டலாம் என்பதே துணிவு.

### எண்ணெய் வளம் இலங்கையில் உண்டா?

பேசாலையில் உண்டு நெடுந்தீவில் உண்டு என்று பேசிப் பேசிப் மக்கள் எப்பொழுது எரிபொருள்வளம் கல்லெண்ணெய் காட்சி அளிக்கும் பாறை எண்ணெய் பயன் வரும்என்றெல்லாம் ஆவலாக எதிர் பார்க்கத் தொடங்கிக் காலம் போய்க்கொண்டிருக்கிறது இதற்கிடையில் எண்ணெய் ஊற்றுக்கு இடமில்லை என்றும் இடமுண்டுஎன்றும் வதந்திகள் பிறக்கின்றன.

### மது இனி இல்லையாம்!

பலகாலமாக யாழ்தேவி உத்தரதேவி முதலிய இருப்புப்பாதை வண்டிகளிற் சிற்றுண்டிச் சாலைகளிலே மது வழங்கப்பட்டு வந்ததும் அதனுல் பிரயாணிகள் பணமிழந்தும் குணமிழந்தும் கூடிக குடித்துக் கும்மாளமிட்ட நிலைமை சமுகத்தைக் கெடுப்பதாகயிருக்கின்றதென்று சற் சங்கங்களும இந்துசாதனமும் இதர வெளியீடுகளும் இத்தீப்பழக்கம் ஒழிக்கப் பட வேண்டுமென்று எடுத்துக்காட்டின, அவற்றின் பயனுகவோ அல்லதுபோக்குவரத்து மந்திரியின் முற்போக்கு நோக்கமாகவோ இனி மது அவ்விடங்களில் வழங்கப்பட மாட்டாதென் றறிகின்றோம்.

**நீரைத் தேக்கி வைத்து நிலத்தை வளஞ் செய்வோம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவலர் பிள்ளைத் தமிழ்.

அநுபந்தம் 1:

# நால்வரும் - நாவலரும்

— "பழைய பாணி" —

நாவலர் பெருமானை ஐந்தாங்குரவர் என்று பிரசித்தஞ் செய்ய முயன்றதற்குக் கைம்மாறாக அவர் விசுவாசியொருவர் அவர் கையால் நேர்முகத் தண்டனை பெற்றுள்ளதாகச் செய்தி. இருந்தும், அவரை ஐந்தாங்குரவர் என்றே பாராட்ட ஆர்வங்கொள்ளும் அன்புள்ளங்கள் இன்னும் அநேகம். அவர் ஐந்தாங் குரவர்தானே? என முறைத்துக்கொள்ளும் உள்ளங்களும் அங்கொன்று-இங்கொன்று.

நால்வர் பெருமக்கள் நம் தொழுகுலங்கள். அவர் தம் அருட் பிரபாவத்தினாலன்றோ நம்போன்ற சிறியோர்களும் தமிழ் சைவம் என்பவற்றின் தெய்விக அருமைப்பாடுகளை அறிந்து அத்துறைகளில் நம்மாலியன்ற பணியாற்றி உய்யும் அருகதை பெற்றுள்ளோம். அவர்கள் நம் பரம குருமூர்த்திகள். எண்ணிக்கை மாத்திரையாற்கூட நம்மை அவர்களோடு தொடர்புபடுத்தல் அடாத காரியம் என்பது நாவலர் திருவுள்ளம். அத்திருவுள்ளப் பொறைக்கு நம் அன்புள்ளங்கள் நசிந்துகொடுத்தே யாகவேண்டும்; அல்லஎன்றற்கருகதை நமக்கேது? எனினும்,

குறைந்தபட்ச அளவில் வைத்துக் கருதும்போதுகூட, நால்வர்பால் தழைவுற்றிருந்த தமிழுணர்வில் லவலேசமாயினும் நாவலர்பால் இருக்கவே இருந்தது. அவர்கள்பால் துடிதுடித்த சைவத் துடிப்பின் அனுப்பதைக்குமளவாவது நாவலர்பால் இருக்கவே இருந்தது. தமிழ் தன்னியல்பான தெய்விகப் பாணியிலே தவழ, சைவம் தன்னியல்பான வைதிக மாண்பிலே திகழ வேண்டி அருள் நாத மெழுப்பிய அந்த நால்வர் பெருமக்கள் காலத்திலிருந்து ஆயிரமாண்டு நீண்ட இடைவெளிக்குப் பின் நாட்டில் எழுந்தொலிக்க நாம் கேட்ட, அதே சார்பான நாதம் நாவலர் நாதமே அதே நாதந்தான் இது அல்லவெனினும் அதன் அநுகரணமே இது என்றல அறிவாராய்ச்சிக்கும் பொருந்துவதேயாம் அன்றியும்,

பெயர் வேறுபட்டிருந்த போதிலும் அன்று அவர்கள் எத்தகைய பரசமய நெருக்கிடைச் சூழலில் அருட்பணி மலிழ்ந்தார்களோ அத்தகையதோர் பரசமய நெருக்கிடைச் சூழலில் நாவலர் பணி அமைந்த நிலைமையும் நாம் எண்ணிப் பார்த்தேயாக வேண்டும்.

இது இங்ஙனமாகலின், நாலவரோடு சமநிலையில் வைப்பதற்கல்ல, நால்வர் பணியருமையை நாமுணரப் பல்லாற்றானும் அவர் சாயைபோன்றுலவிய நல்லியல்பைப் போற்றுதற்காக, அவ்வகையில் நமக்கு வாய்த்த நல்வாய்ப்பை வாழ்த்திக் கொள்வ

( வளர்ச்சி 2 ஆம் பக்கம் )

## குருபூசை

— ௦ —

அருணந்தி சிவாச்சாரியர் குருபூசை யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை ஆதரவில் சபை ஆச்சிரம மண்டபத்தில் சென்ற வெள்ளிக்கிழமை 3- 10 - 75 ) நடைபெற்றது.

சைவப் பெரியார் சி, தப்பிஐயா அவர்கள் பகல் 10 மணியளவில் விசேட பூசை செய்து அருணந்தி சிவாச்சாரியர் புராணத்தைப்படித்தார்கள்.

## நவராத்திரி விழா நிகழ்ச்சிகள்

நாயன்மார்கட்டு. செம்மணி வீதி ஸ்ரீ தேவி ராஜ ராஜேஸ்வரி ஆலயத்தில் ஸ்ரீ மகா நவராத்திரி, லக்ஷ நாமார்ச்சனை, ஸ்ரீ சக்ர யந்திர நவாவரண பூசை, சண்டிகோமம் ஆதியன 5-10-75 முதல் நடைபெற்று வருகின்றன 14ந் தேதி விழா நிறைவெய்தும்,

x x x

யாழ். இந்துக் கல்லூரி பிரார்த்தனை மண்டபத்தில் 13-10-75 மாலை 3 மணி முதல் பக்திப் பாடலுடன் ஆரம்பமாகும். 14ந் தேதி காலை 9-15 க்கு மங்கள இசையுடன் விழா ஆரம்பமாகும். கவியரங்கும் வில்லிசை நிகழ்ச்சியும் இடம்பெறும்.

x x x

யாழ் பெரியபுலம் பாடசாலை நவராத்திரி விழாவில் (12-10-75) திரு. ஷண்முக. குமரேசனும், (13-10-73) சைவப் புலவர் க, சி, குலரத்தினமும் சிறப்புச் சொற்பொழிவாற்றுவர். 14ம் தேதி காலை விஜயதசமிப் பூசையும் வித்தியாரம்பமும் நிகழும்.

பலி நிறுத்தப் பிரசாரக் கூட்டம்

வட்டு மேற்கு - வட்டுக்கோட்டை ஸ்ரீ ஞான வைரவர் கோவிலில் நவராத்திரி விழா சிறப்பாக நடைபெற்று வருகிறது. 12-10-75 மாலை நல்லூர் பஜனைச்சபையினர் பஜனை நடத்துவர், அராலி கிழக்கு அம்பாள் ஆலயத்தில் பலிநிறுத்தம்பற்றிய ஆலோசனைக் கூட்டம் நிகழும், பலி நிறுத்தத் தீர்மானமும் நிறைவேற்றப்படும். ந, நி,

## நாவலர் தொடர்ந்த வழக்கு விளக்கம்

( 2- ஆம் பக்கத்து வளர்ச்சி )

ii நவம்பர் 26 தொடங்கி டிசம்பர் 20ந் தேதி வரை தீக்ஷிதரும் இராமலிங்கரும் பிணையில் விடப்பட்டார்கள். மூன்று வாரகாலம் பிணையிலிருந்தமை சிந்திக்கற்பாலது.

F தீர்ப்பு :

i தலைமைத் தீக்ஷிதருக்கு 50 ரூபா தண்டம் அல்லது ஒரு மாச மறியல்.

ii இராமலிங்கர் தாம் பகிரங்கமாகப் பேசியதைப் பேசவில்லை என்று அழித்துரை வழங்கி விடுதலை பெற்றுக் கொண்டார்.

G நாவலர் :

i இராமலிங்கர் நிலைபற்றி நாவலர் நாணுவாரா? இரங்குவாரா அவர் கருத்து எவ்வாறிருக்கும் என்று ஊகிப்பார் ஊகிக்க.

ii அப்பால் இராமலிங்கர்பற்றி ஒரு வார்த்தைதானும் நாவலர் நாவில் வந்ததில்லை. பல வருடங்கள் பறந்தன.

iii 1876ம் ஆண்டில் தவிர்க்க முடியாத ஒரு சந்தர்ப்பத்தில், 'சுக்கில வருஷம் (1969) ஆனி உத்தர தரிசன தினத்திலே சிதம்பரத்துப் பேரம்பலத்திலே வெகுசனக் கூட்டத்திலே சுவாமி சந்நிதானத்திலே சைவப் பிரசாரகரை அவதூறாகப் பேசிய இராமலிங்கபிள்ளை, அடுத்த மார்கழித் திருவாதிரைத்தினத்திலே மஞ்சக்குப்பக் கோர்ட்டிலே வெகுசனக்கூட்டத்திலே நியாயாதிபதியெதிரே தாம் சைவப்பிரசாரகரை அவதூறாக ஒரு சிறிதும் பேசவில்லை என்று மறுத்து எல்லாராலும் நகைக்கப்பட்டது அவ் வழக்குப் புத்தகம் பேசும்'

என்று கூற வேண்டியவராயினர் நாவலர்.

H i வழக்குப் புத்தகம் என்ன பேசியது? பேசிக்கொண்டிருக்கிறது? என்பது பெரிய கேள்வி.

ii சம்பந்தப்பட்டவர்கள் மறைய வழக்குப் புத்தகமும் கோர்ட்டிலிருந்து மாயமாய் மறைந்துவிட்டது.

iii வழக்குப் புத்தக மறைவு சரித்திரமெழுதுபவர்களுக்குப் பெரிய வாய்ப்பாய்விட்டது.

தம் மனம் போனவாறு வழக்குப்பற்றி எழுதிக் குவித்துவிட்டார்கள்.

I i வழக்கு நடந்து நூறு (100) வருடத்துக்கு மேலாய்விட்டது. வழக்குச சம்பவம் மர்மமாகவே இருந்து வந்தது. வழக்குப் புத்தகம் என்ன பேசியதென்பது தெரியவில்லை.

ii கலாநிதி ச. தனஞ்சயராசசிங்கம் அவர்கள் :

சென்னையிலும் கொழும்பிலும் அக்காலத்தில் நடந்த பிரபல பத்திரிகைகள் இரண்டின்மூலம் வழக்குப் புத்தகம் பேசியதை அட்சரந் தவறாமல் கண்டுபிடித்து, புத்தக வடிவில் வெளியிடுதற்கு ஒழுங்கு செய்து வைத்திருக்கின்றார்கள் கலாநிதி அவர்கள். புத்தகம் விரைவில் வெளிவருதற்குப் பிரார்த்திப்போமாக. குறித்த புத்தகத்தின் சாரமே மேலே சுருக்கமாகக் காட்டப்பட்டது. சற்றே பெருக்கம் (29-6-75) ஞாயிறு தினகரனிலும் (11-7-75) வெள்ளி தினகரனிலும் வெளி வந்தது.

சுருக்க பெருக்கங்கள் புத்தக வரவை எதிர்பார்த்தெழுந்தவை.


## கோட்டு விற்பனவு விளம்பரம்

மல்லாகம் மாவட்டக் கோடு

இல, M B / 12939

அருணாசலம் கதிரவேலு — சுழிபுரம்

எதிராக — வழக்காளி

வேலன் பெரியான் "யாமாலை" சுழிபுரம் கிழக்கு சுழிபுரம்

எதிராளி

மல்லாகம் நீதிமன்றத்தின் எம். வி. 12939-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1975ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம 21-ம் திகதி (21-10-75) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத் தொகை; - முதல் வட்டி ரூபா 4642-ம் 26-1-1972 தொடக்கம் ரூபா 2000-க்கு 9 வீத வட்டியும் அதன் பின் முழுத் தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 279-72½

### ஆதன விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணம் மாவட்டம், வலிகாமம் மேற்குப் பிரிவு சங்கானை கோவிற்பற்று சுழிபுரம் இறை தெறசுத தோட்டம்' நில. பரப்பு 5 குளி 9 புளியமரங்களும பனை மரங்களும் மேற்கு எல்லையிலிருக்கும் கிணற்றில் அரைவாசிப் பங்கும் கிழக்கு ஆறு கன அடி அகல முன்பக்க புதிய ஒழுங்கையும் வேலன் பெரியானதும் மனைவி இலட்சுமியின் ஆதனமும வடக்கு கதிர்காமர் கிருஷ்ணரதும் பங்குக்காரர்களினது ஆதனமும் பொன்னுச்சாமியின கைப்பெண் தெய்வானையினதும் இராமலிங்கம கந்தையாவினதும் உரிமையாதனமும இராமலிங்கம சின்னத்துரையினதும் உரிமையாதனமும் மேற்கு இராமலிங்கம் சின்னத்துரையின் உரிமையாதனமும் புதிய காணியிலிருந்து கிணற்றடிக்குச் செல்லும் ஆறு கன அடி ஒழுங்கையிலிருந்து செல்லும் 4½ அடி கை ஒழுங்கையும மதற்கு 4½ அடி கை ஒழுங்கையும் புதிய ஆறு கன அடி ஒழுங்கையும் கிணற்றில் பங்கும் கிழக்கு எல்லையில பங்கும் வழிவாய்க்கால உரித்தும் தவிர்த்து அது முழுவதடங்கலும் யாழ்ப்பாணப் பதிவு E $\frac{334}{250}$

க. சிவஸ்கந்தா

நாகேந்திரமடம் நீதிமன்ற விற்பனை ஆணையாளரும்

வட்டுக்கோட்டை மதிப்பாளரும்.

17.9.75. 90, 10/10

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல: M. B. 14471

1 கந்தர் சின்னப்பு
2 மனைவி மரியாசீவி இருவரும், பனையபூங்கா வீதி, சுண்டிக்குளி

வழக்காளிகள்

எதிராக

1 சின்னத்தம்பி முத்துராஜா
2 மனைவி திறேசா பூமணி அல்லது நாகரட்டினம இருவரும் ராசேந்திரம் வீதி, குருநகர் யாழ்ப்பாணம்

எதிராளிக்ள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் M B 14471-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1975-ம் ஆடு நவம்பர் மீ 20ந் உ வியாழக்கிழமை (20-11-75) முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை ;- முதல் வட்டி ரூபாய் 1730-ம 29-7-72 தொடக்கம் 21-11-74 வரைக்கும ரூபாய் 1000-க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 452/-

### ஆதன விடரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் சுண்டிககுளி கோவிற்பற்று சுண்டிக்குளி இறை மாவிலங்கையடி வளவு புலம என்று அழைக்கப்படும் காணி நிலப்பரப்பு 1-ம் 17 குளியும் செய்பயிர் வான்பயிர்சளும், எல்லை-கிழக்கு ஒழுங்கை, வடக்கு முன் ஒழுங்கையும மூத்ததம்பி செபஸ்தியாம் பெண் எலிசபெத் மேற்கு நாகமணி, தெற்கு துரசிங்கம் பெண் மாகிரட் ரேஸ்மலர், இதடங்கலும்.

இ. கனகரத்தினம்

கொம்மிஷனரும்

விலைமதிப்பாளரும்.

35/2 கொழும்புத்துறை வீதி,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம்

89, 10/10


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### THOUGHTS TO BE TREASURED

அகாரம் முதலாக ஐம்பத் தொன்றாகி
உகாரம் முதலாக ஓங்கி உதித்து
மகார இறுதியாய் மாய்ந்து மாய்ந்து) ஏறி
நகார முதலாகும் நந்திதன் நாமமே.

There are 51 (letters) commencing with A (which is formed on opening the mouth). It develops into U and other letters and ends with M (on closing the lips).—(Thus is the Omkaram formed:—The Blessed Lord's name begins with N (Namasivaya).

THE SAIVAPRAKASA PRESS

திருச்சிற்றம்பலம்
நமச்சிவாயவே ஞானமும் கல்வியும்
நமச்சிவாயவே நானறி விச்சையும்
நமச்சிவாயவே நாவின் றேத்துமே
நமச்சிவாயவே நன்னெறி காட்டுமே.
திருச்சிற்றம்பலம்

**Hindu Organ**

FRIDAY, OCTOBER 10, 1975

## Selfless Service

Disproving the contention that only the educated elite are entitled to national leadership, Shri Kamraj, the humblest of volunteers without any academic achievement to his credit, was chosen by the teeming millions of Bharata to be their guide. The choice was the people's recognition of the principles of Mahatma Gandhi and the appreciation of true practice of those ideals.

Shri Kamraj was not swept into the Gandhian movement by sudden enthusiasm. He just saw in the campaign, the field for his natural aims and discovered in Gandhiji the ideal Guru. To Shri Kamraj, service to the country was the objective. He understood the ends and ascertained the means in the Gandhian Gospel. He knew that suffering was the badge of the tribe of seekers of freedom. And it was willing sacrifice, continuous suffering, unremitting effort and above all full confidence in his Guru.

The Charka as described by Mahatmaji was one of the non-violent weapons along with the strict adherence to truth and ahimsa. Never did for a single moment Shri Kamraja falter in the use of these means to achieve the end — Swaraj. He became a political pundit—a hand spun, hand woven product of the Gandhian University obtaining honours in selfless Service. This graduation had its effect throughout the esteemed life of Shri Kamraj.

When Caesar declaimed that the Crown was offered to him thrice and that he rejected it at every turn, the tone was that of a high browed autocrat. But the Crown of Free India—Premiership was seeking after Shri Kamraj without being offered, twice and on both occasions Shri Kamraj saw to the Crown being worn by others who in his opinion were best fit and deserving. These may be classified as the supreme occasions when the purity of purpose of Shri Kamraj was put to the test by circumstances.

History has been made richer by the story of the life of Shri Kamraj. These chapters are an exposition of the fundamentals of patriotism and the record of a noble person who lived up to the lofty tradition of Truthful Service.

## Hindu College—A Rich Heritage

Listening to the sincere expression of views of a distinguished Old Boy of the Jaffna Hindu College at the Prize Day last week, were several past students of this premier Hindu Educational Institution who had themselves achieved distinction in one field or another. The present batch of pupils received a very valuable piece of advice, when Shri Siva Pasupathi, the Chief Guest, put it in plain language that character and conduct made students good citizens and that discipline practised during school days should be put to good advantage later in life.

Shri Siva Pasupathi stands as the symbol of Jaffna Hindu tradition and his deserved rise to pre-eminence in the judiciary of this lovely land is but the logical development of the life of a learned gentleman.

Those noble leaders of the glorious past who, awakened to a life of service by the preachings of the Champion Reformer of Hindus 'Sri La Sri Arumuga Navalar' founded the Saiva Paripalana Sabhai and established the Jaffna Hindu College as a necessary adjunct, had prominently put the Northern Peninsula in the map of the educational sphere of Lanka. To those esteemed patriots, the distinction achieved by Shri Siva Pasupathi and others must naturally be a monumental tribute.

The Jaffna Hindu College has maintained a mighty tradition. The College has all along been directed and guided by its noteworthy Old Boys either as Manager, member of the Board of Directors, Principal or lecturer. The present Principal himself is one of the long line of past pupils who have proved their worth as possessing the Jaffna Hindu stamp of culture. Here is an institution that produces every year a large number of capable young-men who receive higher education in the University and adorn the Administrative Departments of the country. This is a significant service to the nation as a whole.

Let the students of this esteemed educational Institution remember the wholesome words of Shri Siva Pasupathi and maintain the exclusive tradition of the College by living a disciplined life at all levels.

### Auction Sale of Unredeemed Jewellery

I shall sell by public auction the unredeemed jewellery pawned between 19-11-1973 and 9-9-1973 with Messrs R. Thuraiappah and Sons. Pawn Brokers Tholpuram, Jaffna, on Thursday 23-10-1975 commencing at 8 A.M. at the said pawn shop.

"Vidana Valavu" S. S. Marimuttu.
Sithankerny Auctioneer.
30-9-75. (28 10 & 17/10)

### Sale of Unredeemed Jewellery

I shall sell by public auction the unredeemed jewellery pawned between 1-8-1969 and 31-5-1974 with Mr. Chelliah Selvathurai of 132, Jaffna Road Kankesanthurai on Tuesday 4-11-1975 commencing at 9-30 A.M. at the said pawn shop.

"Raja giri" V. S. Cuttipillai,
643, K. K. S. Road Auctioneer.
Jaffna 10 & 17/10

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலக மெல்லாம்.

Printed and published by the Proprietors, the Saiva Paripalana Sabhai, Jaffna, at their Saiva Prakasa Press 450 K. K. S. Road Vannarponnai, Jaffna on Friday October 10, 1975.

Editor-in-Chief R. N. Sivapirakasam

## DANCE OF SHIVA

(Dr. Ananda K Coomaraswamy)

(Continued from last issue)

'I already dwell in thee O, my world,
Thy dream of me—'twas I coming into existence....
And thou art all—one wave of freedom and bliss....
By a general conflagration (maha pralaya) the universe (samsara) is embraced
The Spirit is at the height of being, and He feels the tide unending
Of the divine power (shakti) of free will. He is all-daring:
What menaced, now is excitement,
What terrified, is now delight....
And the universe resounds with the joyful cry of I am."

This aspect of Shiva's immanence appears to have given rise to the objection that he dances as do those who seek to please the eyes of mortals: but it is answered that in fact He dances to maintain the life of the cosmos and to give release to those who seek Him. Moreover, if we understand even the dances of human dancers rightly, we shall see that they too lead to freedom. But it is nearer the truth to answer that the reason of His dance lies in His own nature, all His gestures are own-nature-born (svabhava-jah), spontaneous, and purposeless—for His being is beyond the realm of purposes.

In a much more arbitrary way the dance of Shiva is identified with the Pancaksara, or five syllables of the prayer Shi-va-ya-na-ma, 'Hail to Shiva'. In Unmai Vilakkam we are told: "If this beautiful Five-Letters be meditated upon, the soul will reach the land where there is neither light nor darkness, and there Shakti will make it One with Shivam."

(To be continued)

### Sale of Unredeemed Jewellery

I shall sell by public auction the unredeemed jewellery pawned between 1-9-1971 and 31-7-1974 with Mr V. M. Kubarasah and his father Mr. V. Muttiah of Station Road Chunnakam on Thursday 23-10-1975 commencing at 9-30 a. m. at the said pawn shop.

V. S. Cuttipillai
Auctioneer.
"Rajagiri"
643, K. K. S. Road
Jaffna.
26. 3 & 10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org